செ.வெ.எண்:178 நாள்:10.06.2021

கோவிட்-19 கொரோனா பெருந்தொற்று தமிழகத்தில் அதிகமாக பரவி வருவதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் 14.06.2021 வரை முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அவசரத் தேவைகளுக்காக பல்வேறு தனியார் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற்ற மக்களிடம் மாதாந்திர தவணைத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகையினை உடனடியாக திரும்ப செலுத்தக் கோரி சம்பந்தப்பட்ட நிதி நிறுவன பிரதிநிதிகள் வற்புறுத்தி வருவதுடன் மகளிரை பல்வேறு வழிகளில் மிரட்டி வருவதாகவும் அதிகமான புகார்கள் வரப்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து 10.06.2021 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பல்வேறு நுண்நிதி கடன் நிறுவன பிரதிநிதிகள் மற்றும் வங்கி மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூட்டத்தின் போது கொரோனா தொற்றினால் பொதுமக்களுக்கு எற்பட்டுள்ள வாழ்வாதார பாதிப்பினை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்கள் எவ்விதத்திலும் கட்டாய வசூல் மற்றும் உறுப்பினர்களின் வீடுகளுக்கு சென்று வற்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது எனவும், கடனுக்கான தவணைத் தொகையினை வசூல் செய்வதில் கடின போக்கினை அறவே தவிர்த்திட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இனி வரும் காலங்களில் இது தொடர்பான புகார்கள் வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் அதை சார்ந்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பொதுமக்கள் இது குறித்த புகார் அளிப்பதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக மகளிர்திட்ட அலுவலக தொலைபேசி எண்(0462-2500302)-அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ்காணும் இணையதளம் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

E-mail : cms.nbfcochennai@rbi.org.in

Website : https://cms.rbi.org.in

வெளியீடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி .